செ.வெ.எண்:19 நாள்:09.11.2021

**கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையொட்டி முன்னேற்பாடு பணிகள் குறித்து மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் நில சீர்திருத்தத்துறை, அரசு முதன்மை செயலர்/ ஆணையர் டாக்டர்.பீலா ராஜேஷ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் அனைத்துத்துறை அலுவலர்களுடன் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.**

**கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பாதிப்பு ஏற்படக் கூடிய 35 இடங்கள் கண்டறியப்பட்டு 47 மீட்பு மையங்கள் மற்றும் 2054 மீட்பு முன்களப் பணியாளர்கள் தயார் நிலையில் உள்ளனர். இதுவரை தீயணைப்பு துறை சார்பில் 70 ஒத்திகை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளது என மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் நில சீர்திருத்தத்துறை, அரசு முதன்மை செயலர்/ ஆணையர் டாக்டர்.பீலா ராஜேஷ் இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (09.11.2021) மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் நில சீர்திருத்தத்துறை, அரசு முதன்மை செயலர்/ ஆணையர் டாக்டர்.பீலா ராஜேஷ் இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் வடகிழக்கு பருவமழையொட்டி முன்னேற்பாடு பணிகள் குறித்து அனைத்துத்துறை அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் நில சீர்திருத்தத்துறை, அரசு முதன்மை செயலர்/ ஆணையர் டாக்டர்.பீலா ராஜேஷ் இ.ஆ.ப., அவர்கள் திம்மாபுரம் அரசு உயர்நிலைப்பள்ளி, காவேரிப்பட்டிணம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள பேரிடர் மீட்பு மையம் மற்றும் உணவு தயாரிக்கும் கூடங்களை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும், அவதானப்பட்டி படகு இல்லத்தில் தீயணைப்புத்துறை வீரர்கள் சார்பில் படகு, பாதுகாப்பு கவச உடை, கயிறு, மரம் அறுக்கும் இயந்திரங்கள், கான்கிரீட் உடைப்பு கருவிகள் உள்ளிட்ட தளவாட பொருட்கள் மூலம் பேரிடர் மீட்பு காலத்தில் மீட்பு பணிகள் மேற்கொள்வது குறித்து நடைபெற்ற ஒத்திகை நிகழ்ச்சியை நேரில் பார்வையிட்டார். மேலும், வெள்ளப்பெருக்கு ஏற்படும்போது பாதிக்கப்பட்ட பொதுமக்களை மீட்பு குழுக்கள் மூலம் மீட்கப்பட்டு அவசர சிகிச்சைக்காக அனுப்பி வைக்கும் ஒத்திகை பயிற்சியை நேரில் பார்வையிட்டார்.

**மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் நில சீர்திருத்தத்துறை, அரசு முதன்மை செயலர்/ ஆணையர் டாக்டர்.பீலா ராஜேஷ் இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணைக்கிணங்க, வடகிழக்கு பருவமழை சேதம் குறித்தும் முன்னேற்பாடு பணிகள் குறித்தும் அனைத்து துறை அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி மற்றும் கிராம பகுதிகளில் மழை காலத்தில் தாழ்வான பகுதிகளில் உள்ள வீடுகளில் தண்ணீர் புகாமலும், சுகாதாரம் மற்றும் தூய்மை பணிகளை மேற்கொள்ள வருவாய் துறை, ஊரக வளர்ச்சி துறை, தீயணைப்பு மீட்பு துறை, சுகாதார துறை, பொதுப்பணித்துறை உள்ளிட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பாதிப்பு ஏற்படக் கூடிய 35 இடங்கள் கண்டறியப்பட்டுள்ளது. வெள்ளப்பெருக்கு ஏற்படும் பட்சத்தில் தாழ்வான பகுதிகளில் உள்ளவர்களை பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு சென்று அவர்களை தங்க வைப்பதற்காக 47 மீட்பு மையங்கள் தயார் நிலையில் உள்ளது. அந்த மையங்களில் தங்க வைக்கப்படும் பொதுமக்களுக்கு தேவையான உணவு சமைக்கும் கூடம், கழிப்பறை வசதி, குடிநீர் வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் உள்ளனவா என்று காவேரிப்பட்டிணம், திம்மாபுரம் பகுதிகளில் இன்று ஆய்வு நடத்தப்பட்டது. ஏரி, குளங்கள் நீர் நிரம்பி உடைப்பு ஏற்படாத வகையில் தடுப்பதற்கு மாவட்டத்தில் போதிய அளவில் மணல் மூட்டைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலும், அவதானப்பட்டி படகு இல்லத்தில் தீயணைப்புத்துறை வீரர்கள் சார்பில் படகு, பாதுகாப்பு கவச உடை, கயிறு, மரம் அறுக்கும் இயந்திரங்கள், கான்கிரீட் உடைப்பு கருவிகள் உள்ளிட்ட தளவாட பொருட்கள் மூலம் பேரிடர் மீட்பு காலத்தில் மீட்பு பணிகள் மேற்கொள்வது குறித்து ஒத்திகை நிகழ்ச்சியை தீயணைப்பு வீரர்கள் நடத்தி காட்டினார்கள். மாவட்டத்தில் இதுவரை 70 ஒத்திகை நிகழ்ச்சிகள் தீயணைப்பு துறை சார்பில் நடத்தப்பட்டுள்ளது. 2054 மீட்பு முன்களப் பணியாளர்கள், ஜேசிபி இயந்திரங்கள், மரம் அறுக்கும் இயந்திரங்கள் மற்றும் பணியாளர்களுக்கு போதிய பயிற்சிகள் வழங்கப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் வடகிழக்கு பருவமழை முடியும் வரை ஆறு, ஏரி, குளங்களுக்கு செல்வதை தவிர்த்தும், கால்நடைகள் நீர்நிலைகளை கடந்து செல்வதை தவிர்த்து பாதுகாப்பாக இருக்க வேண்டும் என மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் நில சீர்திருத்தத்துறை, அரசு முதன்மை செயலர்/ ஆணையர் டாக்டர்.பீலா ராஜேஷ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வுகளில், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.செ.ராஜேஸ்வரி, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.கோ.மலர்விழி, மாவட்ட வன அலுவலர் செல்வி.க.கார்த்திகேயணி இ.வ.ப., கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.விவேகானந்தன், வருவாய் கோட்டாட்சியர்கள் ஓசூர் திருமதி.தேன்மொழி, கிருஷ்ணகிரி திரு.சதீஸ்குமார், இணை இயக்குநர் (நலப்பணிகள்) மரு.பரமசிவன், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.வெ.கோவிந்தன், மாவட்ட தீயணைப்பு அலுவலர் திரு.மகாலிங்கமூர்த்தி, பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் திரு.குமார், ஓசூர் மாநகராட்சி ஆணையாளர் திரு.செந்தில்முருகன், கிருஷ்ணகிரி வட்டாட்சியர் திரு.சரவணன் உள்ளிட்ட அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.**